DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -40

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. கைகேயி | Caste: |
| Husband Name: | திரு. மச்சகேந்திரன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of February -2024.

**A1 , A2, A7, A9, A13 and A17 present. A5, A6, A8, A11, A14 to A16 and A18 called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed. A3 produced.**

**08.02.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் கீழ தெருவில் வசிக்கிறேன். இறந்துபோன காசிநாதன், மகாலிங்கம், தர்மலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளில் திருவாளப்புத்துார் ரமேஷ், ராஜதுரை ஆகிய இருவரும் வெளியூரை சேர்ந்தவர்கள். மற்ற எதிரிகள் அனைவரும் எனது கிராமத்தை சேர்ந்தவர்கள்.

எங்கள் ஊரில் நடந்த தேர்தலில் என் கணவர் போட்டியிட்டார். என் கணவருக்கு எதிராக எதிரி ரவிசந்திரன் போட்டியிட்டார். 1ஆம் எதிரியை சாட்சி சரியாக அடையாளம் காட்டுகிறார். அத்தேர்தலில் யார் யாருக்கு ஓட்டுபோடவேண்டும் என்பது தொடர்பாக காளியம்மன் கோவிலில் வைத்து சத்தியம் செய்யவேண்டுமென்று எதிரிகள் தரப்பில் கேட்டார்கள். அப்போதிலிருந்தே பகை ஆரம்பித்துவிட்டது. காளியம்மன் கோவிலில் திருவிழா நடத்தினோம். அது சம்மந்தப்பட்ட கணக்கு

வழக்குகளை என் கணவர் பார்த்தார். தேர்தலுக்கு பின்னிட்டு பிரச்சனை ஏற்பட்டதால் அந்த கணக்குகளை எதிரிகள் என் கணவரிடமிருந்து வாங்கிகொண்டார்கள்.

காசிநாதனின் வயலின் வழியாகத்தான் தேசிங்குபாலன் அவரது வயலுக்கு போகமுடியும். ஒருநாள் தேசிங்குபாலன் காசிநாதன் வயலின் வழியாக வண்டியை ஓட்டிசென்றபோது அதனை ராஜலிங்கம் தடுத்தார். அதனால் அவர்களுக்குள் மேலும் விரோதம் ஏற்பட்டு பிரச்சனையாகிவிட்டது. அதன் காரணமாக அன்றைய தினம் ஊரில் சண்டை ஏற்பட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள் அதில் தேசிங்குபாலன் அதிகமாக காயப்பட்டு அவர் பிழைக்கமாட்டார் என்று சொல்லிவிட்டார்கள்.

திருவாளப்புத்தூர் ரமேஷ், ராஜதுரை மற்றொரு நபர் ஆகியோர் எனது வீட்டிற்குள் நுழைந்து எனது வீட்டிலுள்ள பொருட்களை அடித்து நொறுக்கினார்கள். அப்போது வீட்டில் நான், மல்லிகா, பவுனாம்பாள் ஆகியோர் இருந்தோம். நாங்கள் தப்பித்து ஓடிவிட்டோம். சுமார் 20 தினங்கள் கழித்து தான் நாங்கள் வீட்டிற்கு திரும்பினோம். வீட்டிலிருந்த 30 ஆடுகள், 9 மாடுகள், 30 மூட்டை நெல், 10 மூட்டை நிலக்கடலை ஆகியவை இல்லை.

சாட்சி மல்லிகா வீட்டையும், ராஜலிங்கம் வீட்டையும் அடித்து நொறுக்கிவிட்டார்கள். நாங்கள் ஊருக்கு திரும்பி வந்து சுமார் 15 தினங்கள் கழித்து ஒருநாள் நான் மாடு ஓட்டிவிடுவதற்காக என் கொழுந்தனாரை கூப்பிடுவதற்கு சென்றேன். கொழுந்தனார் பெயர் கோவிந்தசாமி. அவரது வீடு தபால் அலுவலகம் அருகில் இருக்கிறது. நான் சென்று அவரை கூப்பிட்டேன். அவர் வெளியே வந்தார். நான் என் கொழுந்தனாரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அந்த இடத்திற்கு முதலில் எதிரி திருஞானம் வந்தார். பின்னர் எதிரி ரவிசந்திரன் வந்தார். அவர்கள் கத்திகளுடன் வந்தார்கள். சாட்சி இரண்டாம் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்.

அவர்கள் இருவரும் சுரேசை வெட்டிவிட்டார்கள். சுரேஷ் கீழே விழுந்து கைகால்கள் இழுத்துக்கொண்டு இறந்துவிட்டார். எனக்கு அதிர்ச்சி ஆகிவிட்டது.

என் கொழுந்தனார் என்னை அங்கேயே கீழே உட்காரவைத்துவிட்டார். நான் சுமார் இரண்டுமணி நேரங்கள் கழித்து எழுந்து சென்று பார்த்தபோது குருநாதன் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள புளியமரத்தின் அருகில் பிரபுவின் தலையில்லாத உடல் கிடந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். இந்த கொலை வழக்கு சம்மந்தமாக என் கணவர் மீதும் போலிசார் வழக்கு பதிவு செய்து கைது செய்துவிட்டார்கள். அதனால் என் கணவருக்கு அவர் பார்த்து வந்த அரசாங்க ஆசிரியர் உத்யோகம் போய்விட்டது.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காயமடைந்த ஜானகியை போலிசார் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டுபோய்விட்டார்கள் என்றால் காலை 10.00 மணி இருக்கலாம் அல்லது 12.00 மணி இருக்கலாம். எங்களது வீடுகள் சேதப்படுத்தப்பட்ட சம்மந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் ஊர் முழுவதும் சேதப்படுத்தப்பட்டது என்பதால் நாங்கள் புகார் கொடுக்கவில்லை.

இன்றைக்கு எனக்கு முன்னர் விசாரிக்கப்பட்ட சாட்சியின் பெயர் பரசுராமன். அவரது தகப்பனார் பெயர் கோவிந்தசாமி.

நீதிமன்ற கேள்வி – அந்த சாட்சியின் பெயர் செல்லப்பன் என்றால் சரியா?

பதில் – அவரை செல்லப்பன் என்று ஊரில் அழைப்பார்கள்.

அவரது உண்மையான பெயர் பரசுராமன். பிரச்சனை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு ஆரம்பித்துவிட்டது என்றால் சரிதான். பிரச்சனை 10.00 மணிக்கு முடிந்துவிட்டது என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். பிரச்சனை 8.30 மணிக்கு முடிவடைந்துவிட்டது.

நீதிமன்ற கேள்வி – பிரச்சனை 8.30 மணிக்கு முடிந்ததா அல்லது 10.00 மணிக்கு முடிவடைந்தா?

பதில் – சாட்சி நீதிமன்றத்தை பார்த்து 8.30 மணிக்கு என்றுகூட வைத்துக்கொள்ளுங்கள் என்றும், பிரச்சனை நடந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டது என்றும், அதெல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு இருக்கமுடியுமா என்றும் கேட்கிறார்.

பிரச்சனை காலை 8.00 மணிக்கு முடிவடைந்து அதிலிருந்து ஒருமணிநேரத்தில் போலிசார் கிராமத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். தேசிங்குபாலன் இறந்ததிலிருந்து 10 முதல் 15 போலிசார் எங்களது ஊரில் பாதுகாப்பு பணியில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் வங்குடி கீழதெருவில் வசிக்கிறேன். நீதிமன்றத்தில் நான் முதல் விசாரணையில் சாட்சி எப்படி சொல்லவேண்டுமென்று போலிசார் இன்று காலையில் சொல்லிகொடுத்தார்கள் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எனது கணவரை அழைத்து சென்று 10 நாளில் திருப்பி அனுப்பிவிட்டார்களா என்றால் இல்லை. தேசிங்குபாலன் கொலைவழக்கு சம்மந்தமாகத்தான் அழைத்து சென்றார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தேர்தல் பிரச்சனை, கோவில்பிரச்சனை, நிலப்பிரச்சனை ஆகியவை நான் கேள்விப்பட்டது என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்பவம் எதனையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. இறந்துபோன நபர்கள் எனக்கு பங்காளி உறவுமுறை. எதிரிகள் அனைவரும் உள்ளூரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளும் அவர்களது உறவினர்களும் தேசிங்குபாலன் கொலை வழக்கு சம்மந்தமாக என் கணவருக்கு எதிராக சாட்சியம் சொன்னவர்கள் என்றால் சரிதான்.

எதிரிகள் எனது கணவருக்கு எதிராக தேசிங்குபாலன் கொலை வழக்கில் உண்மையான சாட்சியம் சொன்ன காரணத்தினால் எதிரிகள் மீது விரோதம் கொண்டு இந்த வழக்கில் நான் அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசிநாதன் குடும்பத்தினர் ஊரில் சாராயம் விற்ற காரணத்தினால் எங்களது கிராமத்தில் அவர்களது குடும்பத்தினருக்கு எதிர்ப்பு இருந்தது என்றால் சரிதான். ஊரில் சாராயம் விற்க கூடாது என்று ஊர்மக்கள் காசிநாதன் குடும்பத்தினரை அடிக்கடி கேட்டார்கள் என்றால் சரிதான்.

வங்குடி கிராமத்திற்கு அருகே காடுவெட்டி கிராமம் இருக்கிறது என்றாலும்,

அந்த கிராமத்தில் வன்னியர் இன மக்கள் வசிக்கிறார்கள் என்றாலும் சரிதான். வங்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள் தலித் மக்கள் என்றால் சரிதான். எனவே வங்குடி கிராமத்தை சேர்ந்தவர்களுக்கும் காடுவெட்டி கிராமத்தை சேர்ந்தவர்களுக்கும் ஜாதி ரீதியான பிரச்சனையும், பேருந்தில் ஏறுவது சம்மந்தமான பிரச்சனையும் ஏற்பட்டு வந்தது என்றால் சரிதான்.

எதிரிகள் ஆடு, மாடு மற்றும் பொருட்களை எடுத்து சென்றதை நான் நேரில் பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் பொருட்களை உடைத்ததை நான் நேரில் பார்த்தேன். எதிரிகள் ஆடு, மாடு மற்றும் பொருட்களை எடுத்து சென்ற போது நான் புன்னுரான்காடுவெட்டி கிராமத்திலுள்ள என் தாயார் வீட்டிற்கு போய்விட்டேன். நான் அங்கு ஒரு மாதம் இருந்தேன்.

**3,6 மற்றும் 8-ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**13-ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**Sd/- G. Sri Rama Jeyam,**
**III Additional District Judge,**
**Salem.**